டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 5.11.2025 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 112 - Madurai | Online Edition

# இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் சீரிய நடவடிக்கைகள்

புது தில்லி, நவ.4

நாட்டின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 18 சதவீத பங்களிப்பையும் இந்தியாவின் மொத்த மக்கள் தொகையின் 50 சதவீத மக்களின் வாழ்வாதாரத்திற்கும் காரணியாக வேளாண் துறை அமைந்துள்ளது. உயர்கல்வி ஆராய்ச்சி, உரிய பயிற்சி ஆகியவற்றின் மூலம் மனிதர்களின் திறன் மேம்பாட்டை அதிகரிப்பதுடன், வேளாண் உற்பத்தியை அதிகரித்து அதற்கான உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதன் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது இன்றியமையாததாகும். வேளாண் கல்வி, ஆராய்ச்சி போன்ற முக்கிய நடவடிக்கைகளை அங்கீகரிப்பதுடன் வேளாண் உற்பத்தியின் 5 சதவீத வளர்ச்சி வீதத்தை எட்டுவதற்கான அறிவியல் பூர்வ நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டுவதில் ஒரே நாடு, ஒரே விவசாயம், ஒரே குழு என்ற கொள்கைகளின் அடிப்படையில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் கடந்த 1929-ம் ஆண்டு மத்திய வேளாண் அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட நிறுவனம், வேளாண் ஆராய்ச்சி மற்றும் உயர்கல்வியில் நாட்டின் மிகச்சிறந்த நிறுவனமாக உள்ளது. வேளாண் பல்கலைக்கழகம், தோட்டக்கலை, மீன்பிடி தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் ஆராய்ச்சிப் பணிகளுக்கு வழிகாட்டியாக செயல்படுவதே இந்த நிறுவனத்தின் முக்கியப் பொறுப்பாகும். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், 113 தேசிய அளவிலான ஆராய்ச்சி நிறுவனங்களையும் நாடு முழுவதும் 74 வேளாண் பல்கலைக்கழகத்தையும் கொண்டுள்ள விரிவான அமைப்பாக உள்ளது. வேளாண் ஆராய்ச்சித் தொடர்பான பணிகளை உலகின் மிகப் பெரிய அமைப்பாகவும் இது உருவெடுத்து வருகிறது. பசுமைப் புரட்சி மற்றும் பருவநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கான தொடர் நடவடிக்கைகள், அதிக மகசூல் தரும் பயிர் வகைகள் மற்றும் வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த ஆய்வுகளுக்கும் இந்த அமைப்பு வகை செய்கிறது.

# பி.எம்.கிசான் தவணை தொகை தொடர்ந்து பெற தனித்துவ விவசாய அடையாள எண் அவசியம்!

ராணிப்பேட்டை, நவ.4

இனி வரும் காலங்களில், விவசாயிகளுக்கான கௌரவ நிதியான, பி.எம்.கிசான் தவணை தொகை பெற தனித்துவ விவசாய அடையாள எண் அவசியம் என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், கௌ.திலகவதி தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 'பிரதம மந்திரி கிஸான் சம்மான் நிதி' திட்டமானது பிப்ரவரி 2019 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் நான்கு மாதத்திற்கு ஒருமுறை தலா ரூ.2000/- வீதம் ஆண்டிற்கு 6,000/- ரூபாய் மூன்று தவணைகளில், சொந்தமாக விவசாய நிலம் வைத்துள்ள விவசாயக் குடும்பங்களுக்கு உதவித் தொகையாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடிப் பணப்பரிமாற்றம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசு, பி.எம்.கிசான் பயனாளிகள் வரும் காலங்களில் தவணை தொகை பெற தனித்துவ விவசாய அடையாள எண் அவசியம் என உறுதியாக தெரிவித்துள்ளது. விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் மற்றும் தோட்டக்கலை அலுவலர்களை தொடர்பு கொண்டோ அல்லது பொது சேவை மையத்தின் மூலமாகவோ தங்களது ஆதார் எண், சிட்டா, ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுடன் சென்று உடனடியாக பதிவு செய்து தனித்துவ விவசாய அடையாள எண் பெறலாம்.

எனவே, பி.எம்.கிசான் தவணை தொகை தொடர்ந்து கிடைத்திட இது நாள் வரை தனித்துவ விவசாய அடையாள எண் பெறாத பயனாளிகள் தங்கள் வட்டார வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு தனித்துவ அடையாள எண்ணுக்கு பதிவு செய்ய என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டுக்கொண்டார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# கலப்பு உரம் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு அறிவுரை!



பெரம்பலூர், நவ.4

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள், தற்போது கலப்புரத்தில் மண் கலந்து உள்ளதா என அச்சம் தெரிவித்து வருகின்றனர்.

பொதுவாக கலப்பு உரங்கள் தயாரிக்கும் போது தழை/மணிச் சத்து மற்றும் சாம்பல் சத்து சாக்கில் குறிப்பிட்டுள்ளபடி அளவு இருப்பதுடன் மீதியாக அதை நிரப்புவதற்கு உதவியாக நிரப்பிகள் பயன்படுத்தப் படுகிறது. (Fuler Mat) நிரப்புவதனால் மணல், சுண்ணாம்புக்கல், டாலமைட் மற்றும் மரத்தூள் போன்ற பொருட்கள் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

நிரப்புப் பொருள் என்பது பாலிமர் சங்கிலிகளுடன் வேதியியல் பிணைப்புகளை உருவாக்காமல் கலப்புப் பொருட்களில் விதைப்பு அல்லது அடர்த்தி போன்ற பண்புகளை மேம்படுத்த பொதுவாக அல்லது தூள் வடிவத்தில் நிரப்பிகள் சில வகைகள் தாவர சத்துடன் அளவு சரி செய்ய பயன்படுத்தும் ஒரு சேர்க்கையாக வரையறுக்கப்படுகிறது. வட்டார அளவில் உள்ள தரக்கட்டுப்பாடு அலுவலர்கள் பிரதி மாதம் அனைத்து உர விற்பனை நிலையங்களில் மாதிரி எடுத்து ஆய்விற்கு அனுப்பி வருகின்றனர். தரத்தின் அடிப்படை தரக்குறைவான உர மாதிரி களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகள் உரக்கடைகளில் விற்பனை செய்யப்படும் கலப்பு உரங்கள் தரம் குறைவு என சந்தேகம் எழும் போது, சம்மந்தப்பட்ட வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே கலப்பு உரம் வாங்கி பயன்படுத்தும் விவசாயிகள் அச்சப்பட தேவையில்லை என பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், செ.பாபு தெரிவித்துக் கொள்கிறார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அயோத்தியபட்டினம் வட்டாரத்தில் பண்ணை பள்ளி பயிற்சி

சேலம், நவ.4

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டணம் வட்டாரத்தில் வேளாண்மை உழவர் நலத்துறையில் அட்மா திட்டத்தின் கீழ் சிறந்த வேளாண் தொழில்நுட்ப நடைமுறைகள் என்ற தலைப்பில் நிலக்கடலை பயிரில் விவசாயிகள் பண்ணை பள்ளி பயிற்சி வகுப்பு வெள்ளியம்பட்டி கிராமத்தில் நடைபெற்றது. இதில் ஏற்காடு தோட்டக்கலை இணை பேராசிரியர் சண்முகசுந்தரம் மற்றும் அமைப்பு சாரா அரசு தொண்டு நிறுவன அமைப்பாளர் வெங்கடாசலம் ஆகியோர் கலந்து கொண்டு விதை முதல் அறுவடை வரை உள்ள தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்தனர்.

நிலக்கடலை பயிரில் 45 நாள் மண் அணைத்து ஜிப்சம் இடுவதன் முக்கியத்துவம் அதன் மூலம் திரட்சியான பருப்புகள் மற்றும் அதிக எண்ணெய் பசையுள்ள நிலக்கடலை கிடைக்கும் எனவும், நன்மை மற்றும் தீமை செய்யும் பூச்சிகள் பிடித்து, அவற்றை இனம் கண்டறிதல் மேலும் அவற்றை கட்டுப்படுத்த வேப்ப எண்ணெய் கரைசல், பஞ்சகாவியா, ஜீவாமிர்தம் போன்ற இயற்கை உரங்களை தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தவும், நிலத்தின் தன்மையை பாதுகாக்க இரசாயன உரங்கள் தெளித்து கட்டுப்படுத்துவதை தவிர்த்து, இயற்கை உரங்களை பயன் படுத்துவதன் அவசியம் குறித்து விளக்கி கூறினர். இதில் 25 விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்களான செல்வி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் தமிழ்ச்செல்வி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.



Rithvik Pipe

IS 4985 : 2021 IS 8537

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பிஎம் கிசான் திட்டத்தின் கீழ் கௌரவ நிதி பெறும் விவசாயிகள் மத்திய அரசு வழங்கும் தனித்துவ அடையாள எண் பெறுவது கட்டாயம்

மதுரை, நவ.4

மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கே.பி.முருகேசன் விடுத்துள்ள அறிக்கையில் பிஎம் கிசான் திட்டத்தின் கீழ் கௌரவ நிதி பெறும் விவசாயிகள் மத்திய அரசு வழங்கும் தனித்துவ அடையாள எண் பெறுவது கட்டாயம் எனவும் வரும் 15.11.25க்குள் அடையாள எண் பெறாவிட்டால் கௌரவ நிதி நிறுத்தம் செய்யப்படும் எனவும் அனைத்து விவசாயிகளும் உடனடியாக பதிவு செய்திட கேட்டுக் கொண்டுள்ளார்.

மதுரை மாவட்டத்தில் உள்ள மொத்த விவசாயிகள் 1,25,062 பேரில் இதுவரை 85,062 விவசாயிகள் மட்டுமே பிரதம மந்திரியின் தனித்துவ அடையாள எண் பெற்றுள்ளனர். மதுரை மாவட்டத்தில் பிரதம மந்திரி கௌரவ நிதி பெறும் விவசாயிகள் 57,832 பேரில் இது வரை 44,518 விவசாயிகள் மட்டுமே தனித்துவ அடையாள எண் பெற்றுள்ளனர். எனவே பதிவு செய்யாத விவசாயிகள் தங்களுடைய கணிணி சிட்டா, ஆதார் எண், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைப்பேசி எண் ஆகியவற்றுடன் அருகில் உள்ள பொது இ-சேவை மையம் அல்லது வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை அலுவலகங்களை தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம். விவசாயிகள் நலன் சார்ந்த திட்டங்களை செயல் படுத்தும் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம், கால்நடை பராமரிப்பு, கூட்டுறவு, வருவாய் உள்ளிட்ட 24 துறைகளின் மானிய திட்டங்களை பெற அடையாள எண் அவசியமான ஒன்றாகும்.

எனவே விவசாயிகள் அடையாள எண் பெற வருகிற 15.11.25 வரை பதிவு செய்து பயன் பெறலாம் என மதுரை வேளாண்மை இணை இயக்குநர் கே.பி.முருகேசன் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# சந்தியூர் கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கு ராபி பருவம் பயிற்சி!

சேலம், நவ.4

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரம், வேளாண்மைத் துறை மூலம் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டத்தின் கீழ் ராபி பருவத்திற்கான பயிர் சாகுபடி பயிற்சி நடைபெற்றது. பயிற்சியில் R.சந்திர சேகரன், அட்மா திட்ட தலைவர், கலந்து கொண்டு தலைமை






உரை வழங்கினார். பயிற்சியினை தொடர்ந்து சாகுல் அமீத், வேளாண்மை உதவி இயக்குநர், பனமரத்துப்பட்டி, முன்னிலை வகித்து வேளாண்மைத் துறை திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பற்றியும் விளக்கம் அளித்தார். முனைவர் ஜெகதாம்பாள், திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைவர், வேளாண் அறிவியல் நிலையம், சந்தியூர், கலந்து கொண்டு ராபி பருவ பயிர் சாகுபடி தொழில்நுட்பம் பற்றியும் திருந்திய நெல் சாகுபடி, சிறுதானியம் சாகுபடி தொழில்நுட்பம், அங்கக வேளாண்மை மூலம் பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி பயிற்சி அளித்தார். பயிற்சியில் நந்தகுமார், உதவி வேளாண்மை அலுவலர் கலந்து கொண்டு இயற்கை வேளாண்மை முக்கியத்துவம் மற்றும் பயன்கள் பற்றியும் விவசாயிகள் பயிர் சாகுபடி மேற்கொள்ளும் போது உயிர் உரங்களை பயன்படுத்தி பயிர் சாகுபடி செய்ய கேட்டுக் கொண்டார். சுமித்ரா, வட்டார தொழில்நுட்ப மேலாளர் கலந்து கொண்டு கிராம வேளாண் முன்னேற்ற குழுவின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறினார்.

மேலும் பயிற்சியில் சுகுமார், தோட்டக்கலை உதவி அலுவலர், கலந்து கொண்டு தோட்டக்கலை துறை மூலம் செயல்படும் திட்டங்கள் மானியங்கள் குறித்து விளக்கம் அளித்தார். சுதிர், உதவி வேளாண்மை அலுவலர், வேளாண் வணிகத் துறை மூலம் செயல்படும் திட்டங்கள் மானியங்கள் குறித்து விளக்கம் அளித்தார். இறுதியில் உதவி வேளாண்மை அலுவலர் நந்தகுமார் நன்றியுரை கூறினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் நொச்சி, ஆடாதொடா, வேப்பங்கன்று ஆகியவை வழங்கப் பட்டது. பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# உரங்களை அதிக விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை வேளாண்மை இணை இயக்குநர் எச்சரிக்கை

புதுக்கோட்டை, நவ.4

புதுக்கோட்டை மாவட்ட உர விற்பனையாளர்கள் அனுமதி பெறாத இடங்களிலில் உர இருப்பு வைத்திருந்தாலோ அல்லது அதிக விலைக்கு உரங்களை விற்றாலோ உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985-ன்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்து உள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்து உள்ளதாவது, புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடி மற்றும் உளுந்து, மக்காச்சோளம், நிலக்கடலை, கரும்பு ஆகிய சாகுபடி செய்யப்பட்டுள்ள இதர பயிர்களுக்கும் தேவை யான யூரியா 3224 மெட்ரிக் டன்கள், டிஏபி 1280 மெட்ரிக் டன்கள், பொட்டாஷ் 1108 மெட்ரிக் டன்கள், காம்ப்ளக்ஸ் 4703 மெட்ரிக் டன்கள், சூப்பர் 729 மெட்ரிக் டன்கள் ஆகியன தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், விவசாயிகள் மண்வள அட்டையின் பரிந்துரைப்படி உரமிடுவதனால் உரச்செலவை குறைத்து, மண்வளத்தை மேம்படுத்தலாம். நெல் சாகுபடியில் யூரியா உரங்களை இடும் பொழுது இரண்டு, மூன்று தடவைகளாக பிரித்து இட வேண்டும்.

யூரியாவுடன் ஜிப்சம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றை 5:4:1 என்ற விகிதத்தில் கலந்து இட வேண்டும். ஒரு ஏக்கருக்கு ஒரு தெளிப்பிற்கு அதிகபட்சமாக 26 கிலோவிற்கு மேல் நெற்பயிருக்கு இடக்கூடாது. அதிகமாக இடும்பொழுது பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அதிகமாவதோடு, முதிர்ச்சி பருவத்தில் நெற்பயிர் சாய் வதற்கும் வழி வகுக்கின்றது.

மொத்த உர விற்பனையாளர்கள், வெளி மாவட்டங்களுக்கு உரங்களை ஏற்றுமதி செய்யக் கூடாது எனவும், மேலும், உரங்களை வெளி மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்யக் கூடாது எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. சில்லரை உர விற்பனையாளர்களுக்கு அனுப்பும் பொழுது உரிய பட்டியல்கள் மற்றும் ஆவணத்துடன் உரங்களை வாகனங்களில் அனுப்ப வேண்டும்.

உர விற்பனையாளர்கள் உர உரிமத்தில் அனுமதி பெறாத இடங்களில் உரத்தினை இருப்பு வைப்பதும், உரிமத்தில் அனுமதி

பெறாத நிறுவனங்களிடமிருந்து உரங்கள், கலப்பு உரங்கள் மற்றும் நுண்ணூட்ட கலவை உரங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்வதும், அதனை விவசாயிகளுக்கு விற்பனை செய்வதும் கூடாது. அனுமதி பெறாத நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் மற்றும் விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் உர உரிமம் ரத்து செய்யப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

ஒரே விவசாயின் பெயரில் தேவைக்கு அதிகமாக விற்பனை செய்வது, உர மூட்டையின் மேல் காணப்படும் அதிகபட்ச விலைக்கு மேல் விற்பனை செய்வது ஆகியன ஆய்வில் கண்டறியப்பட்டால் உர உரிமம் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் நானோ டி.ஏ.பி விதைநேர்த்தி விழிப்புணர்வு முகாம்

தஞ்சாவூர், நவ.4

தஞ்சாவூர் மாவட்டம், மாறனேரி கிராமத்தில் இப்கோ நிறுவனத்தின் சார்பில் விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் நானோ டி.ஏ.பி விதை நேர்த்தி விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில், இப்கோ கள அதிகாரியால் நானோ டி.ஏ.பி விதைநேர்த்தியின் முக்கியத்துவம், பயன்படுத்தும் முறை, நானோ தொழில்நுட்பத்தின் நன்மைகள் மற்றும் அவை குருணை உரங்களைவிட அதிக வளர்ச்சி மற்றும் மகசூலைத ரக்கூடியது என்றும் விவசாயிகளுக்கு விரிவாக விளக்கப்பட்டது. மேலும் ஒரு கிலோ விதைக்கு 5 மில்லி லிட்டர் நானோ டி.ஏ.பி அளவில் விதை நேர்த்தி செய்யலாம் அல்லது ஒரு லிட்டர் நீருக்கு 5 மில்லி லிட்டர் நானோ டி.ஏ.பி கலந்து நாற்று, கரணை, கிழங்கு போன்றவற்றில் நேர்த்தி செய்யலாம். நேர்த்தி செய்த விதைகளை நிழலில் உலர்த்தி பின்னர் விதைக்க வேண்டும் என்றும் கூறினார். மேலும் நானோ டி.ஏ.பி பயன்பாட்டினால் விதை முளைத்தல் விகிதம் அதிகரிக்கும், வேர் வளர்ச்சி சிறப்பாகும், இலைகளில் குளோரோபில் உற்பத்தி மேம்படும், தாவர நோய் எதிர்ப்பு சக்தி உயரும், விளைச்சல் மற்றும் வருமானம் அதிகரிக்கும். இக்கருத்தரங்கம் விவசாயிகளிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

DOCTOR OF ASTROLOGY

**பா.இளங்கோவன்**

M.Sc., MBA, D.Astro, Phd.,

ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும் தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# வெங்காயத்தில் கருப்பு திட்டு வருவது ஏன்? இதனை சமையலுக்கு பயன்படுத்தலாமா?



வெங்காயம் இல்லாத சமையல் சுவை தாரது. காலையில் ஆரம்பித்து இரவு வரை உணவில் வெங்காயத்தின் பயன்பாடு இல்லாமல் இருக்காது. வெங்காய விலை சில சமயங்களில் விண்ணை மூட்டும், சில சமயங்களில் அடிமாட்டு விலைக்கு கூட போவதில்லை.

அத்தகைய வெங்காயத்தில் கருமை நிற திட்டுகள் (பெல்லாரி வெங்காயம், பெரிய வெங்காயத்தில் தான் அதிகமாக சமீப காலமாக பார்க்க முடிகிறது. இது எதனால் உண்டாகிறது? சமையலுக்கு பயன்படுத்தலாமா? இதனால் பாதிப்பு உண்டா என்ற கேள்விக்கான பதிலை இங்கு விரிவாக பார்ப்போம்.

**கருப்பு பூஞ்சாணம் எதனால் உருவாகுகிறது தெரியுமா?**

அறுவடை செய்யப்பட்ட வெங்காயத்தை நன்றாக காய வைத்து பின்பு காற்றோட்டமான இடத்தில் சேமித்து வைத்து விற்பனை செய்ய வேண்டும். இது சரியான முறையில் பின்பற்றாவிடில் கருப்பு திட்டுகள் இருக்கும். வெங்காயத்தின் வெளிபுறமாகவோ, சில சமயங்களில் உள்ளேயோ கூட கருப்புநிற கோடுகள் போன்ற புள்ளிகள் இருக்கும்.

அஸ்பெர்ஜில்லஸ் நைஜர் (ASPERGILLUS NIGER) என்ற ஒருவகை பூஞ்சாணம் தான். இது மண்ணில் கூட உயிர் வாழும் இது போன்ற பூஞ்சை வெங்காயத்தின் வெளிப்புற அடுக்குகளில் வளர்ந்து கரியத் தூள் போன்று காணப்படும், இவை மிகுந்த அளவில் வெங்காயத்தை சமையலுக்கு பயன் படுத்துவது கூடாது. இது போன்ற வெங்காயத்தை தொடர்ந்து அதிகளவில் உட்கொண்டால் ஆக்ராடாக்சின் (OCHROTOXIN-A) என்ற நச்சு உற்பத்தி செய்யப்படும் இது சிறு நீரகம் மற்றும் கல்லிரலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடும்.

## இதனை சமையலுக்கு பயன்படுத்தலாமா?

இப்படிப்பட்ட வெங்காயத்தை சமைத்தாலும் இதனுடைய நச்சு (POISON) அழியாது. வெங்காயத்தின் வெளிப்புறம் மட்டும் கருப்பாக இருந்தால் அதனை வெட்டி நீக்கி விட்டு சமையலுக்கு பயன்படுத்தலாம். உள்ளே கருப்பு திட்டு அதிகமாக இருந்தால் அதனை உடனே தூக்கி எறிவதே நல்லது. எப்படி கழுவி சமையத்தாலும் பூஞ்சானத்தின் தாக்கம் இருக்கும்.

இந்த கருப்பு நிற பூஞ்சானம் வெங்காயம் மட்டுமின்றி திராட்சை உருளை பூண்டு போன்ற காய்கறிகள் பழங்களில் தாக்கும்.

எனவே இந்த பூஞ்சானம் பாதிக்கப்பட்ட வெங்காயத்தை மறுபடியும் விதைக்கு பயன்படுத்த கூடாது. காற்றோட்டமான இடத்தில் காயவைத்து உலரவைக்க வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# அரியலூர் மாவட்டத்தில் வேளாண் அதிகாரிகள் ஆய்வு



அரியலூர், நவ.4

அரியலூர் மாவட்டம், வேளாண்மை இணை இயக்குனர் பாபுவின் அறிவுறுத்தலின் படி வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதாகிருஷ்ணனின் ஆலோசனையின் படி அரியலூர் மாவட்டத்தில் தனியார் உரக்கடைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் தர்மபுரி மாவட்ட உர கண்காணிப்பு குழு நேற்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தர்மபுரி மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு சங்கரி தலைமையில் நேற்று அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர், செந்துறை, ஜெயங்கொண்டம், தா.பழூர், ஆண்டிமடம், திருமானூர் ஆகிய வட்டாரத்தில் உள்ள தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் உர கண்காணிப்பு குழு திடீர் ஆய்வு மேற்கொண்டு உரம் இருப்பு விவரம், உர உரிமம், உரம் இருப்பு பதிவேடு, விற்பனை முனைய கருவி மூலம் விவசாயிகளுக்கு உரங்கள் விற்பனை செய்வது, உரங்கள் தினசரி பலகையில் பதிவேற்றம் செய்தல் உர குடோன்களில் உரங்கள் இருப்பு விவரம் மற்றும் மூட்டைகள் சரியாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளதா போன்றவற்றை ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின்போது குறைபாடுகள் கண்டறியப்பட்ட 8 உரக் கடைகளுக்கு விற்பனை தடை ஆணை விதிக்கப்பட்டுள்ளது என்று வேளாண் உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.



# நிலக்கடலை விதையை பரிசோதனை செய்து தரமான விதைகளை பயன்படுத்த வேண்டுகோள்!

புதுக்கோட்டை, நவ.4

புதுக்கோட்டை மாவட்ட நிலக்கடலை சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் நிலக்கடலை விதையை பரிசோதனை செய்து கீழ்க்கண்ட தொழில்நுட்பங்களை கடைபிடித்து அதிக மகசூல் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.




**பரிந்துரைக்கப்படும் இரகங்கள்**

**தமிழ்நாட்டு இரகங்கள் –** விஆர்ஐ 8, விஆர்ஐ 9, விஆர்ஐ 10, டி.எம்.வி 7, டி.எம்.வி 13, டி.எம்.வி 14, கோ–7, பி.எஸ்.ஆர் 2.

**குஜராத் இரகங்கள் –** ஐஸ்ரீ.ஜே.ஜி. 9, ஐஸ்ரீ.ஜே.ஜி. 32, ஜி.ஜி. 34.

**ஆந்திரா இரகங்கள் –** கதிரி லெபாக்ஸி, தரணி

**நிலம் தயாரித்து படுக்கை அமைத்தல் :** சட்டிக் கலப்பையால் உழுத பின் ஒரு ஏக்கருக்கு 5 டன் தொழுஉரத்தை நிலத்தில் பரப்பி நன்கு உழவு செய்து 60 செ.மீ இடைவெளியில் 10 மீ முதல் 20 மீ அளவிற்கு படுக்கைகள் அமைக்கவும்.

**உரமிடுதல் :** தழைச்சத்து மற்றும் மணிச்சத்தை மூன்று பிரிவு களாகப் பிரித்து அடியுரமாக 50 சதவீதம் விதைத்த 20ம் நாளில் 25 சதவீதம் மற்றும் 42ம் நாளில் 25 சதவீதத்தை அளிக்க வேண்டும். மேலும் தமிழக வேளாண்மை துறையின் நிலக்கடலை நுண்ணூட்டக் கலவையை அடியுரத்துடன் ஏக்கருக்கு 5 கிலோ வினை ஊட்டமேற்றிய தொழுஉரத்துடன் கலந்து அளிக்கவும்.

**விதையளவு மற்றும் இடைவெளி :** அனைத்து இரகங்களுக்கும் விதையளவு ஒரு ஏக்கருக்கு 80 கிலோ வீதம் பயன்படுத்த வேண்டும். செடிக்குச் செடி 10 செ.மீ. வரிசைகளுக்கிடையே 30 செ.மீ இடைவெளி கடைபிடிக்க வேண்டும்.

**விதை நேர்த்தி :** உயிர்ப் பூஞ்சாணக் கொல்லிகள், உயிர் உரங்கள் ஆகியவற்றைப் பரிந்துரைக்கப்பட்ட அளவிலும் முறையிலும் பயன்படுத்தி, கீழ்க்கண்டவாறு விதை நேர்த்தி செய்யவும். ஒரு கிலோ விதையுடன் 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். உயிர் உரங்களான ரைசோபியம் ஏக்கருக்கு 250 மி.லி. மற்றும் பாஸ்போபாக்டீரியா 100 மி.லி. உயிர் உரங் களை பயன்படுத்தி விதைநேர்த்தி செய்ய வேண்டும். ஒரு கிலோ விதைக்கு திரம் அல்லது மான்கோசெப் போன்ற பூஞ்சாணக் கொல்லிகளை 4 கிராம் வீதம் கலந்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். உயிர் உரம் மற்றும் டிரைக்கோடெர்மா விரிடியுடன் விதைநேர்த்தி செய்த விதைகளை பூஞ்சாண கொல்லியுடன் கலக்க கூடாது.

**விதைத்தல் மற்றும் களை கட்டுப்பாடு :** விதையை ஒரு குழிக்கு ஒரு விதை வீதம் விதைக்கும் கருவிகளை கொண்டு விதைக்கலாம். விதைத்த 20 மற்றும் 40–ம் நாட்களில் களை எடுக்க வேண்டும்.

**ஜிப்சம் இட்டு மண் அணைத்தல் :** களை எடுத்த பின் விதைத்த 40–45 நாளில் ஒரு ஏக்கருக்கு 160 கிலோ வீதம் ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். இதனால் மண் இலகுவாகி நீர்ப்பிடிக்கும்

திறன், காற்றோட்டம், மேம்பட்டு மண் வளம் பெருகுகிறது. நிலக் கடலை காய்களின் பருப்பு வளர்ச்சி மற்றும் நல்ல வளர்ச்சியடைந்த முழுமையான பருப்புகளைப் பெறுவதற்கு உதவுகிறது.

**நீர் நிர்வாகம் :** விதைத்த 4 அல்லது 5 நாட்களில் நீர்ப்பாய்ச்ச வேண்டும். விதைத்த 20 நாட்களுக்கு பின் பூக்கும் பருவத்தின் இரு முறையும் (26-60 நாட்கள்) காய் உருவாதலின் போது விதைத்த 60 நாட்களில் ஒரு முறையும் நீர்பாய்ச்ச வேண்டும். தெளிப்பு நீர்ப் பாசனம் 30 சதவீதம் வரை நீரை சேமிக்க உதவுகிறது.

**பயிர் பாதுகாப்பு :** நிலத்தைக் களைகளின்றி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இளம்புழுக்களை கைகளால் சேகரித்து அழிக்கலாம். விளக்குப் பொறியை 3-4 வீதம் அமைத்து அந்துப் பூச்சியை கவர்ந்து அழிக்கலாம். விளக்குப்பொறி வைத்திருக்கும் பகுதியில் முட்டைக் குவியலை சேகரித்து அழிக்கலாம். வயலைச் சுற்றிலும் 30 செ.மீ. நீளம் மற்றும் 25 செ.மீ. அகலம் இருக்கும் அளவிற்கு குழிகள் அமைத்து அதன் மூலம் புழுக்களை அழிக்கலாம். அசாடிராக்டின் 600 மிலி ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். இலைப்புள்ளி நோய்களைப் பூஞ்சாணக் கொல்லி களைப் பயன்படுத்திக் கட்டுப்படுத்தலாம். உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளுடன் விதைநேர்த்தி செய்தும் கட்டுப்படுத்தலாம். முந்தைய பயிர்களின் கழிவுகளை ஆழமாக உழவு செய்து நோய் பரப்பும் காரணிகளைக் கட்டுப்படுத்தலாம்.

**விதைப்பரிசோதனை :** கார்த்திகை மற்றும் மார்கழிப் பட்டம் நிலக் கடலை சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டியவை. தரமான நிலக்கடலை விதையானது 96 சதம் புறத்தூய்மையும் 9 சதம் ஈரப்பதத்தையும் 70 சதம் முளைப்புத் திறனையும் கொண்டிருக்க வேண்டும். விவசாயிகள் தங்களது கைவசம் உள்ள நிலக்கடலை விதைகளின் முளைப்புத்திறன், புறத் தூய்மை, ஈரப்பதம் அறிய புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள நம்பர் 30, இராமலிங்கம் தெரு, திருக்கோகர்ணம் 622 002, என்ற முகவரியில் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைப்பு குவியலில் இருந்து நிலக்கடலை 500 கிராம் என்றளவில் மாதிரி எடுத்து துணிப் பையினுள் இட்டுகட்டி அதனுள் முகவரி, குவியல் எண், இரகம் போன்ற விவரங்கள் அடங்கிய விபரச் சீட்டு வைக்கப்பட வேண்டும். மேலும், ஈரப்பத சோதனைக்கு தனியாக 100 கிராம் எடுத்து சிறிய பாலீத்தீன் பையில் போட்டு காற்றுப்புகாத வண்ணம் பேக் செய்து பையினுள் வைத்து ரூ.80/- ஆய்வு கட்டண மாக செலுத்தி விதைகளை பரிசோதனை செய்து தரமான விதை களை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமாறு விதைப் பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் செ.சுமித்ரா தேவி மற்றும் வேளாண்மை அலுவலர் மா.செல்வம் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.

# நெற்பயிரில் புகையான் தாக்குதல் அறிகுறிகள் – கட்டுப்பாடு முறைகள்



ஈரோடு, நவ.4

ஈரோடு வட்டாரத்தில் அணைநாசுவம்பாளையம் மற்றும் S.P.அக்ரஹாரம் பகுதிகளில் நெற்பயிரில் புகையான் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இதனை பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையம், வேளாண் விஞ்ஞானி முனைவர் சத்தியசீலன் மற்றும் சென்னிமலை மற்றும் ஈரோடு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) சி.சசிகலா ஆய்வு மேற்கொண்டனர்.

புகையான் அறிகுறிகள் என்பது நெல் பயிரின் வளர்ச்சியில் 3 பருவங்களில் உருவாகும். இந்த பூச்சி தனது இளநிலை பருவங்கள் மற்றும் வளர்ந்த பூச்சி பருவங்களில், கூட்டம் கூட்டமாக நெற் பயிரின் தூர்களின் அடிப்பாகத்தில் இருந்து கொண்டு தன்னுடைய ஊசி போன்ற வாயால் பயிரின் சாற்றை உறிஞ்சுகின்றன. இதனால் பயிரின் வளர்ச்சி தடைபட்டு, தீய்ந்தது போல காணப்படும். பின்னர் மஞ்சள் நிறமாக மாறிவிடும். பாதிப்புக்குள்ளாகிய இடங்களில் பயிர் திட்டுதிட்டாக வட்ட வடிவில் காயத்தொடங்கி நெற் பயிர் எரிந்து புகைந்து விட்டதைபோல் காணப்படுவதால் இப்பூச்சிக்கு 'புகையான்' (Brown Plant Hopper) என்று பெயர். வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ள இடங்களில் தாக்குதல் அதிகமிருக்கும். இப்பூச்சியின் தாக்குதல் பயிர் நன்கு தூர்கட்டும் நிலையிலிருந்து மணி பிடித்து முற்றும் வரையில் அதிகம் உள்ளது. இலையின் அடிப்பகுதியில் புகையான் தத்துப் பூச்சியின் கழிவுகள் (Honey Dew Secreation) காணப்படும். இதனால் பயிர்கள் வளர்ச்சி குன்றி காணப்படும். இதனை கட்டுப்படுத்த வயலில் ஒரு அங்குல உயரத்திற்கு மேல் நீர் இல்லாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். தேவைப்பட்டால் நீரினை வடித்து விட்டு பாய்ச்சலாம். விளக்கு பொறி வைத்து பூச்சி களை கவர்ந்து அழிக்கலாம். தழைச்சத்தினை அதிகமாக இடுவதை தவிர்த்து 3–4 முறை பிரித்து இடவும். இதனை கட்டுப்படுத்த தையோமெத்தாசேம்–10 கிராம் / Tank கலந்து தெளிக்க வேண்டும் அல்லது டிரைபுளுமிசோபைரீம் 10 சதவீதம் SC அல்லது பைமெட்ரோசின் 40 சதவீதம் WG ஏதாவது ஒன்றினை தெளித்து புகையானை கட்டுப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறான பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடித்து நெல் பயிர் சாகுபடி செய்யுமாறு சென்னிமலை மற்றும் ஈரோடு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) சி.சசிகலா தெரிவித்துள்ளார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# தர்பூசணி சாகுபடிக்கு உகந்த ரகங்கள் - ஒரு பார்வை

இயற்கை கடவுள் கோடை காலத்தில் மனிதர்களுக்கு கொடுத்த அமுதம் தான் தர்பூசணி. சிறுநீர் வராமல் சிரமப்படுவர்கள், நீர்கடுப்பு பிரச்சனை மற்றும் கர்ப்பினிப் பெண்களுக்கும் உகந்த ஒரு பழம். இதனை சாகுபடி செய்ய நல்ல வடிகால் வசதி உள்ளமணற்பாங்கான மண் ஏற்றதாகும். தர்பூசணி செடி மிதமான வெப்பம், அளவான ஈரப்பதம், நல்ல சூரிய வெளிச்சம் உள்ள காலங்களான ஜனவரி – மார்ச் ஏற்ற மாதங்கள் ஆகும். காஞ்சிபுரம் (ம) செங்கல்பட்டு மாவட்டங்களில் விவசாயிகள் கார்த்திகை / மார்கழிப் பட்டங்களில் தர்பூசணி விதைப்பு மேற்கொள்ளுவார்கள். நல்ல இரகங்களைத் தேர்வு செய்து சாகுபடி செய்வதால் பூச்சி நோய்த் தாக்குதல் இன்றி நல்ல மகசூல் எடுக்க இயலும்.

**தர்பூசணி சாகுபடிக்கு மிகவும் உகந்த இரகங்கள்**

**வெளிர்பச்சை நிறம்**

| வ. எண் | இரகம் | வயது | பழத்தின் எடை |
|---|---|---|---|
| 1. | F1 ஹைப்ரிட் US 777 | 80-85 நாட்கள் | 8-0 கி / பழம் |
| 2. | டிராகன்கிங் | 85-90 நாட்கள் | 8-12 கி / பழம் |
| 3. | அபூர்வா | 90-100 நாட்கள் | 8-10 கி / பழம் |
| 4. | பக்கீ ஷா | 70-75 நாட்கள் | 10 கி / பழம் |
| 5. | மாதுரி 64 | 70-75 நாட்கள் | 8-12 கி / பழம் |
| 6. | நம்தாரி | 62-65 நாட்கள் | 3-5 கி / பழம் |
| 7. | அர்க்காமானிக் | 110-15 நாட்கள் | 6 கி / பழம் |
| 8. | அர்க்காஜோதி | 75-80 நாட்கள் | 6 - 8 கி / பழம் |
| 9. | அர்க்காஜஸ்வர்யா | 75-80 நாட்கள் | 10-12 கி/பழம் |

**கரும்பச்சை நிறம்**

| வ.எண் | இரகம் | வயது | பழத்தின் எடை |
|---|---|---|---|
| 1. | மெலோடி F1 | 65-70 நாட்கள் | 4-5 கி / பழம் |
| 2. | மேக்ஸ் | 65-70 நாட்கள் | 4-5 கி / பழம் |
| 3. | சுகர்குயின் | 75-78 நாட்கள் | 2.5-4கி/பழம் |

தர்பூசணியினை மூன்று விதமாக நடவு வயலில் விதைகளை விதைக்கலாம்.

1. இரண்டு முதல் மூன்று மீட்டர் இடைவெளியில் பார் அமைத்து பாரின் இரு பக்கங்களிலும் விதைகளை 2 -3 அடி இடைவெளியில் ஒரு குழிக்கு 3 - 4 விதைகளை ஊன்றலாம்.

2. குழி நடவு முறையில் 60x60x60 செ.மீ அளவில் குழி அமைத்து குழிகளுக்கிடையே 2-3 மீட்டர் இடைவெளிவிட்டு ஒரு குழிக்கு 4 விதைகள் ஊன்றலாம்.

3. வீரிய ஒட்டு இரகங்களுக்கு ஆற்றுப்படுக்கை நடவு முறையில் 30x30x30 செ.மீ அளவில் குழி அமைத்து குழிகளுக்கிடைய 1 - 1.5 மீட்டர் இடைவெளி விட்டு ஒரு குழிக்கு 2 விதை என்ற அளவில் விதைகளை ஊன்றலாம்.

நேரடி விதைப்பிற்கு (இரகங்கள் / வீரிய இரகங்கள்) ஒரு ஹெக் டருக்கு 3-3.5 கிலோ வரை தர்பூசணி விதைகள் தேவை. விதை களை பன்னிரெண்டு மணி நேரத்திற்கு மிதமான வெந்நீரில் ஊற வைத்து அதன் பிறகு ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டி.விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனஸ் (பூஞ்சானம் / பாக்டீரியாகளை) விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைத்தல் அவசியம். இவ்வாறு காஞ்சிபுரம், விதைப்பரிசோதனை அலுவலர், பெ.ராஜகிரி தெரிவித்துள்ளார்.

# நெல்லில் புகையான் தாக்குதல் வருமுன் காக்கும் - கட்டுப்படுத்தும் முறைகள்

கிருஷ்ணகிரி, நவ.4

நெற்பயிரில் புகையான் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழி முறைகள் குறித்து, கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செ.பன்னீர்செல்வம் விவசாயி களுக்கு கூறும் தொழில்நுட்ப செய்தியாவது,

சூளகிரி வட்டாரத்தில் நடப்பு பருவத்தில் அனைத்து பகுதிகளிலும் நல்ல மழை பெய்துள்ளது. இதனை பயன்படுத்தி வட்டாரத்தில் அனைத்து பகுதிகளிலும் நெல் சுமார் 3000 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் சூளகிரி, பார்த்தகோட்டா, காமன்தொட்டி, உத்தனப்பள்ளி, சென்னப்பள்ளி, பிக்கனப்பள்ளி, ஆகிய கிராமங் களில் தற்போது நிலவும் சீதோசன நிலை காரணமாக நெல்லில் புகையான் தாக்குதல் ஆங்காங்கே தென்பட வாய்ப்புள்ளது.

புகையான் தாக்கப்பட்ட நெல் வயல்களில் புகையானின் குஞ்சுகளும் வளர்ந்த பூச்சிகளும் கூட்டம் கூட்டமாக நெற்பயிரின் தூர்களில், குத்துகளின் அடிபாகத்தில் நீர் பகுதிக்கு மேலே இருந்து கொண்டு தண்டில் உள்ள சாற்றை உறிஞ்சிவிடுவதால் பயிர்கள்

முதலில் மஞ்சள் நிறமாகி பின்னர் பழுப்பு நிறமாக மாறும். பயிர்கள் வட்ட வட்டமாக தீயில் கருகியது போல் காணப்படும். இந்த பூச்சியை கட்டுப்படுத்த, தேவைக்கு அதிகமாக தழைச்சத்து (யூரியா) இடுவதை தவிர்க்க வேண்டும். தழைச்சத்தை 3-4 முறை பிரித்து இட வேண்டும். நீர் மறைய நீர் கட்ட வேண்டும். வயலில் உள்ள தண்ணீரை சுத்தமாக வடித்து விட்டு, இடைவெளியில் பயிர்களை மடக்கி, இடைவெளி தெரியுமாறு செய்ய வேண்டும். இதனால் பயிருக்கு போதுமான சூரிய ஒளி மற்றும் காற்று கிடைப்பதால் பூச்சிகள் வளர்ச்சியடைய தேவையான சூழல் தடுக்கப்படுகின்றது.

வயலில் உள்ள தண்ணீரை சுத்தமாக வடித்துவிட்டு வேர்களில் நன்கு படும்படி, பூப்பதற்கு முன் அசாடிராக்டின் 1000 மி.லி, இமிடா குளோப்ரிட் 17.8% எஸ்.எல். 40 மில்லி, பெனோகார்ப் 50% ஈ.சி. 500 மில்லி, பிப்ரோனில் 5% எஸ்.சி. 500 மில்லி, குளோரான் ட்ரேனிலிரோல் 18.5% ஈ.சி. 60 மில்லி, இதில் ஏதேனும் ஒரு மருந்தினை கைத்தெளிப்பான் கொண்டு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பூத்த பின் நீரை வடித்து விட்டு, ஏக்கருக்கு 10 கிலோ கார்பரில், 10% தூளை பயிரின் அடிப் பகுதிகளில் படும்படி தூவ வேண்டும்.

புகையானுக்கு எதிர்ப்பு சக்தி உருவாக்கும் பூச்சி மருந்துகளான செயற்கை பைரித்ராய்டுகள், மீதைல் பாரத்தியான், குயினால்பாஸ் போன்ற மருந்துகள் உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும். பூச்சி நோய் இல்லா பயிர் சாகுபடி மேற்கொண்டு குறைவில்லா விளைச்சல் பெறவேண்டும் எனவும் அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் விபரங்களுக்கு வட்டார வேளாண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்களை அணுக வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

# நெல்லில் பண்ணைப்பள்ளி பயிற்சி




சேலம், நவ.4

சேலம் மாவட்டம், கொளத்தூர் வட்டாரத்தில் கோல்நாய்க்கன்பட்டி கிராமத்தில் 25 விவசாயிகளுக்கு நெல்லில் சிறந்த வேளாண்மை தொழில்நுட்ப நடைமுறைகள் குறித்த பண்ணைப்பள்ளி இரண்டாம் வகுப்பு நடத்தப்பட்டது.

இப்பயிற்சிக்கு கொளத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் சரஸ்வதி கலந்து கொண்டு, வேளாண்மைத் துறை திட்டங்கள், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் குறித்து விரிவாக பேசினார்.

ஓய்வு பெற்ற வேளாண்மை இணை இயக்குநர் பழனியப்பன் கலந்துக் கொண்டு, நடவு வயலில் இயற்கை உரங்களான அசோஸ் பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ஊட்டமேற்றிய தொழுஉரம், வேப்பங் கொட்டை சாறு இடுவதன் முக்கியத்துவம், வரப்பில் பயறு வகைகள் விதைப்பதன் முக்கியத்துவம் குறித்தும், நன்மை செய்யும் பூச்சி களான சிலந்தி, பொறிவண்டு, ஊசி தட்டான், நீள் கொம்பு வெட்டுக் கிளி ஆகியவை வயலில் இருப்பதன் முக்கியத்துவம் குறித்தும், தீமை செய்யும் பூச்சிகளை இயற்கை முறையில் கட்டுபடுத்துவது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். முன்னோடி விவசாயி அர்ச்சுனன் அக்னி அஸ்திரம், ஜிவாமிர்தம் தயாரித்தல் குறித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை தொழில்நுட்ப மேலாளர்கள் இந்துமதி, கமலக்கண்ணன் செய்திருந்தார்கள்.



# நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி



மதுரை, நவ.4

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டார வேளாண்மைத்துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டம் மூலம் நெற்பயிரில் ஒருங் கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் – விரிவாக்கப் பணியாளர்கள் – விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம் பயிற்சியானது 4.11.25 அன்று பரவை கிராமத்தில் நடத்தப்பட்டது.

இப்பயிற்சிக்கு மதுரை மேற்கு வட்டார துணை வேளாண்மை அலுவலர் அ.உமா, துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள் குறித்தும், ஒருங்கிணைந்த தரவு தளம் மூலம் விவசாய அடையாள எண் பதிவு செய்தல் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். நடமாடும் மண் பரிசோதனை நிலையத்திலிருந்து ஜோஸ்பின், மண் மாதிரி ஆய்வுக்கு எடுப்பது எப்படி, மண் வகைகள், மண் ஆய்வின்படி உரமிடல், மண்வள அட்டை பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்து மண்மாதிரி ஆய்வு குறித்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கு தொழில்நுட்ப உரை வழங்குவதற்கு ஓய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் குண சேகரன், பருவம் மற்றும் இரகத் தேர்வு, விதை நேர்த்தி, நாற்றாங்கால் பராமரிப்பு, நடவு வயல் தயாரித்தல், உரமிடல், நீர் மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை போன்ற ஒருங் கிணைந்த பயிர் மேலாண்மை முறைகளை விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். கோடை உழவு, மண்வளம், உயிர் உர பயன்பாடு, விதை நேர்த்தி முறைகள், வரப்பில் பயறு, சிறுதானியங் களின் முக்கியத்துவம் ஆகியவை குறித்த பதாகைகளுடன் விழிப்புணர்வு பிரச்சார நடை பயணம் மேற்கொள்ளப்பட்டது.

சம்பா பருவ பயிர் காப்பீடு செய்வது குறித்து யுனிவர்சல் சாம்போ நிறுவன வட்டார ஒருங்கிணைப்பாளர் ராமச்சந்திரன், பயிர் காப்பீடு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் சுந்தரகிருஷ்ணன், வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ராஜசேகர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பாலமுருகன் ஆகியோர் செய்திருந்தனர்.

# நெல் பயிரில் வெள்ள பாதிப்பின் போது கடைபிடிக்க வேண்டிய மேலாண்மை முறைகள்

**நாற்று / நாற்றங்கால் பருவத்தின் போது**

● கூடுதல் நீரை வடிகட்ட வேண்டும்.

● மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைக்க வேண்டும்.

● நேரடி விதைப்பிற்கு முளைக்கட்டிய விதைகளை விதைக்க வேண்டும்.

● குறுகிய கால இரகங்களை விதைப்பு செய்ய வேண்டும்.

**வளர்ச்சி பருவத்தின் போது**

● கூடுதல் நீரை வடிகட்ட வேண்டும்.

● ஒரு சதவிகித யூரியா கரைசல் (ஏக்கருக்கு 2 கிலோ யூரியா + 1 கிலோ சிங்சல்பேட்+200 லிட்டர் தண்ணீர்) தெளிக்க வேண்டும்.

● நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க ஏக்கருக்கு 1 கிலோ சூடோமோனாஸ் நுண்ணுயிரினை 20 கிலோ மணல் (அ) தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும்.

● பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங் கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும்.

**பூக்கும் மற்றும் பால்பிடிக்கும் பருவம்**


● கூடுதல் நீரை வடிகட்ட வேண்டும்.

● இரண்டு சதவிகித டிஏபி கரைசல் தெளிக்க வேண்டும்.

● ஏக்கருக்கு 50 கிலோ அம்மோனியம் சல்பேட் (அல்லது) 22 கிலோ யூரியாவுடன் 18 கிலோ பொட்டாஷ் கலந்து மேலுரமாக இடவேண்டும்.

● பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங் கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் என சேலம் மாவட்டம், சங்ககிரி, வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333